முதல் சந்திப்பு

– ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

தமிழ் நாட்டில் காவிரி பாயும் தென்சீமையிலே, ஒரு பெரியவர் சுற்றிக் கொண்டு இருக்கிறார். அவர் ஓர் அபூர்வப் பேர்வழி. காரைச் சித்தர் என்று அழைக்கப்படுகிறார். அவர் வியக்கத்தக்க அபார சக்தி வாய்ந்தவர். அதை அவர் எளிதில் வெளிக்காட்டிக் கொள்வதில்லை. எல்லோரிடமும் சகஜமாகச் சாதாரண மனிதர் போலத்தான் பழகி வருகிறார். என்றாலும், அவரை அண்டியவர்கள் பல நன்மைகளை அடைந்துள்ளனர் என்பது உண்மை. இதைப் பற்றி அவரிடம் எவரேனும் பிரஸ்தாபித்தால் “எனக்கென்ன தெரியும்? நான் ஒன்றும் அறியேன். எல்லாம் அவன் செயல்!” என்று சகஜமாக வினயத்துடன் சிறிதும் கர்வமின்றி. சொல்லி வருகிறார். அவர் மிகவும் இளகிய மனம் படைத்தவர்.

பிறர் துயர் தீர்ப்பதிலேயே நாட்டம். பக்தர் வேண்டுதலுக்கு இரங்கி அழைக்கும் இடமெல்லாம் போவார். பசி, தாகம், உறக்கமின்மை என்று பார்க்கமாட்டார். சதா சுற்றுதல்தான். குடும்பம், வீடு, வாசல், என்று இருந்தும் அவற்றை எல்லாம் துறந்துவிட்ட ஞானி அவர். “அவரை நீங்கள் தரிசிக்க வேண்டாமா?” என்று கேட்டார் என் ஆப்த நண்பர் ஒருவர். அவருக்குத் தெரியும் எனக்கு இத்தகைய பெரியோர்களைத் தரிசிப்பதில் அவா உண்டு என்று. மேலும் இறைவழிபாட்டிலும் ஆன்மீகத் துறையில் சஞ்சரிப்பதிலும் எனக்கொரு ஆர்வம் உண்டு எனவும் அறிவார் அவர்.

சுமார் இரண்டு வருடத்துக்கு முன் ஒரு நந்நாள்! அந்தப் பெரியவரை வீட்டுக்கு அழைத்து வந்தார் நண்பர். சித்தருக்கு நாற்பது வயது இருக்கும். கட்டுமஸ்தான தேகம், தலையில் ஒரு முண்டாசு. கண்களிலே ஓர் அபூர்வமான ஒளி. பார்க்கும்போதே இவர் அபார சக்தி வாய்ந்தவர்; ஆனால் புளியம் பழமும் ஓடும்போல பற்றற்ற நிலையில் இருப்பவர்; மென்மையான உள்ளம் படைத்தவர். உலகிலே, அபூர்வமாக உலாவி வரும் பெரிய மகான்களிலே இவரும் ஒருவர் என்று சித்தர் லட்சணங்களை அறிந்தவர் எளிதில் கூறிவிடுவர்.

அவரை வணங்கி மரியாதையுடன் வரவேற்றேன். அவர் மௌனமாக, கையை நீட்டினார். அவர் வந்தபொழுது வெறும் கையுடன்தான் வந்தார். ஒன்றும் கொண்டுவரவில்லை. ஆனால் எனக்கு நீட்டிய கரத்தில் ஒருபிடி சந்தனத்தூள் இருக்கக் கண்டேன். அப்பப்பா! அந்த வாசனையைச் சொல்லி முடியாது. அறை முற்றும் மணங் கமழத் தொடங்கிற்று. பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டேன். பயபக்தியுடன். ‘ஜாக்கிரதையாகப் பிரசாதத்தைப் பத்திரப் படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். ஏதேனும் வியாதி, அல்லது மனக்கஷ்டம் நேரும் போது, ஸ்வாமிகளை நினைத்துக் கொண்டு கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொள்ளுங்கள் அல்லது நெற்றியில் இட்டுக்கொள்ளுங்கள்’ என்று கூறினார் ஸ்வாமிகளை அழைத்து வந்த அடியார்.

அன்று முதல், அந்த ஞானசித்தரை அவ்வப்போது தரிசிக்கவும், அவர் தம் குணாதிசயங்களை யறியவும் அவர் விளையாடும் சித்து விளையாட்டுக்களை நேரில் கண்டு வியக்கவும் வாய்ப்பாக கிடைக்கலாயிற்று.

அவரைப் பக்தி சிரத்தையுடன் வழிபடத் தொடங்கினேன். ஆனால் அவரோ ஒரு மகனுக்குத் தாயிடம் ஏற்படும் அன்பைக் காட்டி, அம்மா என்றழைத்து என்னுடன் சகஜமாகப் பழகி வந்தார், படாடோபம் ஏதுமின்றி.

ஆம்! உண்மை! அவருடைய விளையாட்டுக்களையும், பேச்சுக்களையும் பார்க்கும் பொழுது இவர் பால சுப்ரமணியனோ அல்லது அந்த மாயக் கண்ணனோ என்று வியக்கும்படி இருக்கும். எனக்கு மட்டுமல்ல அவரிடம் பக்தி செலுத்துகிற அடியார் அனைவருக்குமே.

ஒரு நாள் சுவாமிகள் திருமுல்லைவாயிலுள்ள வைஷ்ணவி கோவிலுக்குச் சென்றார். தேவியின் சேவையில் ஈடுபட்டிருந்த சகோதரர் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்து, கோயிலைச் சுற்றிக் காண்பித்தார். தேவியின் பூஜை சமயம் குடலையில் புஷ்பங்கள் மிகக் குறைவாக இருந்தன. ‘புஷ்பச் செடிகள் பல வைத்து நந்தவனம் ஏற்படுத்தி இருக்கிறேன். என்ன பயன்! தேவியின் பூஜைக்கு வேண்டிய புஷ்பம் இன்று கிடைக்க வில்லையே’ என்று வருத்தப்பட்டார், தேவியின் பக்தர்.

“ஏன் அதோ தெரிகிற செடியில் நிரம்ப புஷ்பங்கள் இருக்கலாமே! குடலையை எடுத்துப் பறித்துவரச் செல்லுங்கள்” என்றார் ஸ்வாமிகள்.

‘என்ன, இப்பொழுதுதான் நான் செடியிலிருந்த ஒன்றிரண்டு மலர்களையும் பறித்துவிட்டேனே! இனி ஏது மலர் செடியில்? என்றாள் பக்தரின் மகள்! இல்லை யம்மா நீ அங்கே போய் செடியைச் சமீபத்தில் பார்த்தால் தானே தெரியும்? நான் சொல்கிறேன் நீ போய்ப் பாரம்மா!’ என்றார் சித்தர். மகள் போய்ப் பார்த்த பொழுது வெற்றுச் செடியாக இருந்தது, முற்றும் பூத்துக் குலுங்கியது. பறிக்கப் பறிக்கக் குடலை நிரம்பியதே தவிர செடியில் பூக்கள் குறையவில்லை. அங்கு அன்று வைஷ்ணவி ஆலயத்தில் கூடியிருந்த பக்தர்கள் அனைவரும் பெரும் வியப்பில் ஆழ்ந்து விட்டனர்.

ஒரு சமயம் நான் ஸ்வாமிகளுடன் வெளியூர்க்குப் போய் இருந்தேன். நாங்கள் நான்கைந்து பேர் அன்று ஒரு இடத்தில் தங்கினோம். படுக்கை போர்வை எல்லாம் உடன்கொண்டு போயிருந்தோம். ஆனால் ஸ்வாமிகளுக்குப் போர்வை இல்லை, ‘இரவு குளிருமே. ஸ்வாமிகளுக்குப் போர்வை இல்லையே!’ என்று பேசிக் கொண்டோம். எங்கள் போர்வையில் ஒன்றை ஸ்வாமிகளுக்கு எடுத்துக் கொடுப்பதற்கும் சற்றுத் தயக்கமாக இருந்தது. ‘நீங்கள் கவலைப்பட வேண்டாம் பாருங்கள்! இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் போர்வை வரப் போகிறது’ என்று எங்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சொன்னார் ஸ்வாமிகள். சிறிது நேரத்துக்கெல்லாம் இரண்டு நண்பர்கள் ஸ்வாமிகளைத் தேடிக்கொண்டு வந்தார்கள். அவரைத் தம் இல்லத்துக்கு அழைத்துச் செல்வதற்காக.

அவர்கள் வந்து சேர்வதற்கும் ஸ்வாமிகள் தோளில் ஒரு புத்தம்புதுப் பட்டு சால்வை தொங்குவதற்கும் சரியாக இருந்தது. எங்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஆனாலும் சந்தேகம்! “இப்பொழுது நீங்கள் உடன்கொண்டு வந்தீர்களா, சுவாமிகள் போர்த்தியிருக்கும் இந்த சால்வையை?” என்று வந்தவர்களைத் துணிந்து கேட்டு விட்டோம். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. மலைத்துப் போனார்கள். ‘நாங்கள் ஸ்வாமிக்குக் காணிக்கை ஒன்றும் கொண்டுவரவில்லையே, வெறும் கையுடன்தானே வந்தோம்’ என்றார் வருத்தத்துடன்.

ஸ்வாமிகள் காணிக்கை ஏதும் பெற்றுக் கொள்ளமாட்டார். குறிப்பிட்ட சிலரிடம் தான் தனக்குத் தேவையானதைக் கேட்டுப் பெற்றுக் கொள்வார். ஆனால் அவர் கும்பகோணம் பக்கம் ஒரு ஆஞ்சநேய ஸ்வாமிகளுக்குப் பாகசாலை, யாத்திரீக விடுதி முதலிய திருப்பணிகளை நடத்தி வருகிறார். அந்தத்

திருப்பணிகளுக்கு வேண்டுமானால் உதவினால் பெற்றுக் கொள்வார், என்று சொல்லி, போர்வை பற்றி நாங்கள் கேட்டதன் காரணத்தையும் விளக்கினோம். அன்றைய அற்புத நிகழ்ச்சி அனைவரையும் பரவசமாக்கி விட்டது.

ஒரு நாள் ஒரு இடத்தில் ஸ்வாமிகள் சில நண்பர்களுடன் ஸ்வாரஸ்யமாக பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது திடீரென்று ஏதோ ஞாபகம் வந்தவர் போலக் காணப்பட்டார். 'என்ன?' என்று வினாவினார்கள் பக்கத்திலிருந்த நண்பர்கள். 'ஒன்றுமில்லை, ஒருவரை இன்று ரயிலடியில் காலை 10.40 மணிக்குச் சந்திப்பதாகச் சொல்லியிருந்தேன். மறந்தே போய்விட்டேன். அவரை அவசியம் பார்க்க வேணுமே! இல்லாவிட்டால் அவர் மிகவும் வருத்தப்படுவாரே!' என்றார். 'இன்னும் அரைமணி நேரம்தான் இருக்கிறது இரயில் நேரத்திற்கு. இப்பொழுது இங்கு வண்டி வசதி ஏதும் இல்லையே! டாக்ஸி கூட கிடைக்காதே! எப்படிப் போக முடியும்?' என்றனர் நண்பர்கள். ஸ்வாமிகள் இருக்கும் இடத்திற்கும், ரயில் ஸ்டேஷனுக்கும் சுமார் 15 மைல் இருக்கும். ஸ்வாமிகள் யோசித்தார் போலும். சில வினாடிகளுக்கு எல்லாம் அவர், 'இதோ வருகிறேன்' என்று நண்பர்களிடம் சொல்லிவிட்டு, தோட்டத்துப் பக்கம் சென்றார். பிறகு சுமார் ஒரு மணி நேரம் கழித்து வந்து சேர்ந்தார். மறுநாள் சில நண்பர்கள் வந்து, முன் தினம் காலை சுமார் 10.30 மணிக்கு ஸ்வாமிகளை ரயிலடியில் கண்டதாகச் சொன்னார்கள். இதைக் கேட்ட ஸ்வாமிகளின் அடியார் அனைவரும் வியப்புற்றனர். ஸ்வாமிகளைக் கேட்டதில், தான் ரயிலடிக்குச் சில நண்பர்களைக் காணச் சென்றது உண்மை என்று ஒத்துக் கொண்டார். ஆனால் அந்த ஒரு மணி நேரத்திற்குள் எப்படிப் போய்த் திரும்பினார் என்று விளங்கவில்லை. அது அனைவருக்கும் புரியாத புதிராகவே இருக்கிறது, இன்று வரை.

ஒரு நாள் சுவாமிகள் என்னிடம் ஒரு அருமையான பூஜைப் பொருளைக் கொடுத்து பூஜையில் வைக்கும்படி சொன்னார். பிறகு ஒரு நாள் சில பக்தர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது என்னிடம் கொடுத்த அதே பொருளைக் கையில் வைத்துக்கொண்டு அவர்களுக்குக் காட்டினார் என்று தெரிய வந்தது. என்ன விந்தை! அந்தப் பொருள் என் பூஜையில் இருக்கத்தான் செய்தது. சுவாமிகளை நேரில் கேட்டபொழுது சிரித்தார். 'நான் எங்கே காட்டினேன்? அவர்களாக நினைத்திருப்பார்கள்; மனதில் கற்பனை செய்திருப்பார்கள்' என்றார்.

ஸ்வாமிகள் ஒரு சமயம் நண்பர்களுடன் திருக் கோவிலூருக்குச் சென்றார். ஊருக்குள் செல்லும் பொழுது வழியில் ஒரு நாவிதன் வீட்டு வாயிலில் இறங்கிக் கொண்டு, 'நீங்கள் போய் வாருங்கள். எனக்கு இங்கே வேலை இருக்கிறது' என்றாராம். நண்பர்கள், சென்ற வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்து பார்த்த பொழுது ஸ்வாமிகள் அந்த நாவிதன் வீட்டிற்கு முன்னிருந்த தென்னை மரத்திலிருந்து தேங்காய்களைப் பறித்துப் போட்டுக் கொண்டிருந்ததைக் கண்டனர். நாவிதனுக்கு அவர் அவன் கிராமத்தைச் சேர்ந்தவராகவே காணப்பட்டாராம். அவனுடன் பல பழைய சம்பவங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததாக நண்பர்கள் கூறினர்.

ஸ்வாமிகள் சதா சுற்றிக் கொண்டு இருக்கும் காரைக்கோட்டை, வடுவூர் முதலிய கிராமங்களில் வாழும் பல ஏழைக் குடியான மக்களுடன் தோழமை பூண்டு உறவாடி அவர்களுக்கு விறகு வெட்டிக் கொடுப்பது, குடிசை கட்டுவதில் உதவுவது போன்ற பல பணிகளைச் செய்து வருவது வழக்கம் என்று அவருடைய பால்ய நண்பர்கள் கூறக் கேட்டிருக்கிறோம்.

முற்றும் துறந்த முனிவரான ஸ்வாமிகளுக்கு, ஏழை பணக்காரன் என்ற தாரதம்மியம் கிடையாது. பார்ப்பனர் தாழ்ந்த சாதியார் என்ற வித்தியாசமும் கிடையாது.

ஆஞ்சநேயமூர்த்தி சந்நிதியில்தான் சுவாமிகள் பெரும்பாலும் காணப்படுவார். அந்தப் பக்கத்துக் கிராமங்களில் உள்ள ஏழை மக்களுக்கு ஸ்வாமிகள் ஒரு பிரத்யட்ச தெய்வம் எனலாம். எத்தனையோ பேர் தீராத நோய்களை உடையவர்கள் அங்கு வந்து ஸ்வாமிகளின் அனுக்ரஹம் பெற்று சுகம் அடைந்துள்ளார்கள். ஸ்வாமிகள் எப்போதும் சுற்றிக்கொண்டே இருப்பார். பல மைல்கள் வயல்களிலும் வரப்புக்களிலும் நடந்து சென்று பக்தகோடிகளின் துயரைத் தீர்க்கச் செல்வார்.

ஒரு சமயம் இடைவிடாமல் மழை பெய்துக் கொண்டு இருக்கையில் சில சென்னை நண்பர்கள் சாந்தவெளிக்குச் சென்று இருந்தனர். ஸ்வாமிகள் அவர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அப்பொழுது ‘இதோ வந்துவிட்டேன்’ என்று கைத்தடியை எடுத்துக் கொண்டு வெளியில் போனார். ‘இந்தக் கொட்டும் மழையில் எங்கு போகப் போகிறார்’ என்று நண்பர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் காலையில் 10 மணிக்குச் சென்ற சுவாமிகள் மாலை 6 மணிக்குத்தான் திரும்பி வந்தார். பிறகுதான் விஷயம் தெரியவந்தது. ஒரு மைலுக்கு அப்பாலுள்ள விசலூர் என்ற கிராமத்தில் ஒரு பக்தருடைய அன்னையார் நோய்வாய்ப்பட்டிருந்தாராம். அந்த அம்மையாருக்கு தைரியம் சொல்லி மருந்து கொடுக்கப் போனாராம். அந்தக் கொட்டும் மழையில் – வெள்ளக்காடாய் இருந்த பாதையில் ஸ்வாமிகள் எப்படிப் போய் வந்தார் என்று ஆச்சரியப்பட்டனர் அடியார்கள்.

ஒரு நாள் சாந்தவெளிக்கு ஓர் ஏழைப் பெண்மணி – 30 வயது இருக்கும். 4 குழந்தைகளுடன் வந்து சேர்ந்தாள். அவளுடைய புருஷன் சரியாக இல்லாததால், தன்னுடைய குழந்தைகளை ஆற்றில் தள்ளிவிட்டுத் தானும் விழுந்துவிடப் போவதாக அழுதுகொண்டே வந்தாள். ஸ்வாமிகள் அவளை அங்கேயே தங்கச் சொல்லி அவர்களுக்குச் சாப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்தார். ஒருவாரம் அந்தக் குடும்பம் அங்கேயே ஆஞ்சநேயர் சந்நிதியில் தங்கி இருந்தது. ஏழாவது நாள் அந்தப் பெண்மணியின் புருஷன் தானாக வந்து ஸ்வாமிகளின் முன்னிலையில் வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தன் குடும்பத்தைக் கூட அழைத்துக் கொண்டு போய்விட்டான். இப்படியே தினமும் எத்தனையோ ஏழை மக்கள் ஸ்வாமிகளின் பேரன்புக்கும் கருணைக்கும் பாத்திரர்களாகி நல்வாழ்வு பெறுகிறார்கள்.

மண்ணையும் பொன்னையும் சமமாகக் கருதும் பெரியோர்களை, தானே வலுவில் வந்தடைகின்றன அஷ்டமா சித்திகளும். அவர்களோ கைக்கெட்டிய இந்தச் சித்திகளைப் பொருட் படுத்துவதில்லை. ‘இதுவல்ல! இதுவல்ல!’ நான் தேடும் பொருள்! என்று ஞான சித்தர் அவற்றை அறவே புறக்கணித்து விடுகிறார். அவரே அந்தப் பரம் பொருளைக் காணும் பேறு பெறுகிறார். எனினும், அவசியம் வந்தபோது மக்கள் உய்வதற்காக சித்தி விளையாடிக் காட்டவும் செய்கிறார். மண்ணைப் பொன்னாக்குகிறார். சாதாரணப் பச்சிலையைச் சிறந்த ஔஷதமாகச் செய்து விடுகிறார். பித்தனை பக்தனாகவும், பாமரனைப் பண்டிதனாகவும், மாற்றுகிறார். பிரிந்தோரைக் கூட்டி வைக்கிறார். அத்தகைய சித்தர் பரம்பரையில் வந்தவர்தான் பகவான் ஸ்ரீ காரைச் சித்தர்.